# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | பகுதி I<br>பரதநாட்டியம் I | நேரம் :-3 மணித்தியாலங்கள் |
| சுட்டெண்:............................... | 45 T I | |

கவனிக்க:
- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

1. பரதநாட்டிய கச்சேரியில் இடம்பெறும் லய வாத்தியம்.
   1. மிருதங்கம் 2. வீணை 3. சுருதி 4. வயலின்

2. பல அடவுகளின் சேர்க்கை.
   1. கோர்வை 2. தீர்மானம் 3. அடவு 4. ஜதி

3. தெய், தெய், திதி தெய், இதிலுள்ள மொத்த அட்சரங்களின் எண்ணிக்கை?
   1. 11 2. 9 3. 8 4. 10

4. முகஒப்பனைக்குப் பயன்படுத்தும் பொருள் அல்லாதது.
   1. பான்ஸரிக் **(Panstick)** **2.** பான்கேக் ( **Pancke)**
   3. பிங்பௌடர் **(PinkPowder)** **4.** சிவப்பு மை ( **red ink)**

5. அலாரிப்பில் ஆரம்பத்தில் வரும் சுந்தரி க்ரீவா பேதத்துடன் வரும் திருஷ்டி பேதம்
   1. சாசி 2. ப்ரலோகிதம் 3. சமம் 4. உல்லோகிதம்

6. தெய்வம்,. குரு, சபையோரை வணங்குமுகமாக ஆடப்படும் உருப்படி.
   1. அலாரிப்பு 2. வர்ணம்
   3. பதம் 4. தில்லானா

7. ஒரு நாட்டியப் பாத்திரத்திற்கு அனுசரணையாக அமைய வேண்டிய விடயங்களைக் குறிப்பது.
   1. பாத்திர லக்ஷணம் 2. பாத்திரப் பிராணன்கள்
   3. குருலக்ஷணம் 4. சிஷ்யலக்ஷணம்

8.தஞ்சைப் பெருங்கோயிலின் ஆயிரமாம் ஆண்டு நிகழ்வு எப்போது நடைபெற்றது.

1. 2010 ஐப்பசி
2. 2010 தை
3. 2010 புரட்டாதி
4. 2010 மார்கழி

9. தேயிலைக் கொழுந்து நடனம் எவ்வகைக் கிராமிய நடனம் ஆகும்.

1. மகிழ்ச்சிக்காக ஆடும் கிராமிய நடம்
2. வேண்டுதலுக்காக ஆடும் கிராமிய நடனம்
3. தொழில்சார் கிராமிய நடனம்
4. வருமானத்திற்காக ஆடும் கிராமிய நடனம்

10. மூக்கில் ஒரு பக்கத்திற்கு மட்டும் வட்டமாக அணியும் அணிகலன்.

1. வங்கி 2. நெத்திசுட்டி 3. இராக்கொடி 4. நத்து

11. பல்லக்கினை அபிநயிக்கப் பயன்படும் முத்திரை

1. கட்வா 2. நாகபந்த 3. வராகம் 4. அவஹித்தம்

12. தித்தெய்ந்த தா தெய் அடவினை அபிநயிக்கும் போது அதிகளவில் பயன்படும் காலின் செய்கை?

1. சுற்றிவருதல் 2. பாய்ச்சல் 3. நடத்தல் 4. துள்ளுதல்

13. அடிப்படையான ஏழு தாளங்கள் 35 தாளங்களாவதற்குக் காரணமாக அமைவது

1. கதி 2. ஜாதி 3. சொற்கட்டு 4. குளை

14. பரிசுத்தமான உணர்வுகளை முகபாவங்களினாலும் முத்திரைகளினாலும் வெளிப்படுத்தி காட்டுவது.

1. நாட்டிய தர்மி 2. அபாத்திர லக்ஷணம் 3. லோக தர்மி 4. பாத்திர லக்ஷணம்

15. வெள்ளைக் குதிரையில் போர்வீரனைப் போல் விஸ்ணு எடுக்கவுள்ள அவதாரம்.

1. ஸ்ரீராமர்அவதாரம்
2. பலராம அவதாரம்
3. பரசுராம அவதாரம்
4. கல்கி அவதாரம்

16. கோவலன் கூத்து பயில் நிலையில் உள்ள இடம்.

1. மன்னார் 2. முல்லைத்தீவு 3. யாழ்ப்பாணம் 4. மட்டக்களப்பு

17. தாத்தா என்று அன்பாக அழைக்கப்பட்ட நாட்டியக் கலைஞர்

1. ருக்மணி அருண்டேல்
2. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
3. பால சரஸ்வதி
4. பொன்னையாப்பிள்ளை

18. சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடைவை பகல் முழுவதும் முழுக்கூத்தையும் ஆடிப்பழகுதல்.
1.தினக்கூத்து 2. கிழமைக்கூத்து 3. அடுக்குப்பார்த்தல் 4. அரங்கேற்றம்

19. பந்தனைநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை பிறந்த ஆண்டு யாது?
1.1856 2.1969 3.1869 4. 1905

20. கூத்தினைப் பழக்குபவர் எவ்வாறு அழைக்கப்படுவர்.
1.நட்டுவனார் 2. அண்ணாவியார் 3. பக்கவாத்தியக்காரர் 4. கூத்தனார்

21. "வயிறு" இதனை குறிக்கும் சமஸ்கிருத சொல்.
1. அங்கானாம் மோடனே 2. ஆலிங்கனேச
3. சங்கபூரனே 4. துந்த தர்சனே

22. காத்தவராயன் கூத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் தோல் வாத்தியம்
1.மிருதங்கம் 2. தவில் 3. தபேலா 4. கிற்றார்

23. ஸ்வரமாலை, ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் நடன உருப்படி
1. அலாரிப்பு 2.தில்லானா 3.வர்ணம் 4. ஜதீஸ்வரம்

24. வடபாங்கு, தென்பாங்குக் கூத்துக்கள் பயில் நிலையில் உள்ள பிரதேசம்.
1. மன்னார் 2. முல்லைத்தீவு 3. மலையகம் 4. மட்டக்களப்பு

25. கோர்வை அமைக்கும் போது இறுதியில் இடம்பெற வேண்டிய அடவு.
1. தத் தெய் தாஹா 2. மகுட அடவு
3. தெய் தெய் தத்தா 4. தத் தெய் தாம்

26. மூன்று வெவ்வேறு அங்கங்களைக் கொண்ட தாளம்
1. ஜம்பைதாளம் 2. அடதாளம்
3. திரிபுடதாளம் 4. ஏகதாளம்

27. பாட்டும் தாளமும் ஒரே நேரத்தில் ஆரம்பிப்பது
1. சம எடுப்பு 2. விசம எடுப்பு 3. அதீத எடுப்பு 4. ஆநாகத எடுப்பு

28. கைகளில் செம்பு முதலான பொருட்களை ஏந்தி ஆடும் நடனம்.
1.கும்மி 2. குறத்தி நடனம் 3. காவடி 4. ஏந்தல் நடனம்.

29. தினமும் மூன்று அல்லது நான்கு மணி நேரம் அண்ணாவியார் கூத்தருக்கு ஆடல், பாடல் பழக்கும் கூத்து?
1. கிழமைக்கூத்து 2. சட்டம் கொடுத்தல்
3. தினக்கூத்து 4. ஊருக்கு சொல்லல்

30. மகிடிக்கூத்து ஆடப்படும் பிரதேசம்

1. முல்லைத்தீவு 2. யாழ்ப்பாணம் 3. மட்டக்களப்பு 4. மலையகம்,

31. திஸ்ர ஜாதி துருவதாளத்தின் எண்ணிக்கை யாது?

1. . 17 2. 11 3. 29 4. 18

32. தாங்கிடு தத்தத்தின்ன என்ற சொற்கட்டுக்குரிய அடவு

1. கோர்வையடவு 2. மண்டியடவு 3. மகுட அடவு 4. பாய்ச்சல் அடவு

33. தெய் தெய் தத்தா அடவின் தாளம்

1. ஆதி 2. ரூபகம் 3. ஏகம் 4. அட தாளம்

34. தஞ்சைப் பெருங்கோவிலை அமைத்த மன்னன்

1. இராஜேந்திரன் 2. பராந்தகன் 3. இராஜராஜன் 4. நரசிம்மன்

35. சிவபெருமான் ஆடிய தாண்டவங்களில் ஐந்தொழில்களையும் வெளிப்படுத்துவது

1. ஆனந்த தாண்டவம் 2. ஊர்த்துவ தாண்டம்
3. திரிபுர தாண்டவம் 4. சம்கார தாண்டவம்

36. நாட்டியப் பயிற்சியின் போது பயன்படுத்தப்படும் உபகரணம்.

1. மிருதங்கம் 2. வீணை 3. ஓகன் 4. தட்டுக்களி

37. ஒரே பாத அசைவினையும் வேறுபட்ட கையசைவினையும் பயன்படுத்தி ஆடப்படும் அடவு

1. தா தெய் தெய்த 2. தெய்ஹத்தெய்ஹி
3. குத்தடவு 4. தத் தெய் தாம்

38. ஆதி தாளத்தின் மறுபெயர்

1. திஸ்ர திரிபுடை தாளம் 2. சதுஸ்ர திரிபுடை தாளம்
3. கண்ட திரிபுடை தாளம் 4. சங்கீரண திரிபுடை தாளம்

39. “பாதசாரிகா” என்னும் பாதநிலை

1. பாய்தல் ஆகும் 2. சுற்றிவருதல் ஆகும்
3. நிற்றல் ஆகும் 4. நடத்தல் ஆகும்.

40. பின்வருவனவற்றில் விரல்களில் கூடு அணிந்து கொண்டு வாசிக்கும் வாத்தியம்.

1. றபான் 2. தவில் 3. டோலக் 4. மிருதங்கம்

( 40 புள்ளிகள்)